# திருநெல்வேலி மாநகராட்சி

## 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் நாள் திங்கட் கிழமை மாலை 5.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு) திருநெல்வேலி-7-ன் மேலாளர் (விற்பனை) அவர்களின் கடிதம் ந.க.எண் 2455/ஆமப/2020, நாள் 04.01.2021-ன்படி தமிழக அரசின் கொள்கைகளை தீவிரமாக செயல்படுத்தும் விதமாகவும், பொதுமக்களுக்கு தரமான பால் தடையின்றி கிடைக்கும் வகையில் மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பெருமாள்புரம் காவல் நிலையத்திற்கு எதிரில் அமைந்துள்ள தற்காலிக பேரூந்து நிலையத்தில் 10 X 10 என்ற அளவில் ஆவின் பாலக பூத் அமைத்து பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை செய்ய இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு இடம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக மேலப்பாளையம் மண்டலம் உதவி செயற்பொறியாளர்(பொ) அவர்களின் 09.01.2021-ஆம் தேதிய அறிக்கையின் படி மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 26, பெருமாள்புரம் காவல் நிலையத்திற்கு எதிரில் உள்ள தற்காலிக பேரூந்து நிலையத்தின் உட்புறம் Transformer-க்கு தென்புறத்தில் 10’ X 10’ என்ற அளவில் ஆவின் பார்லர் (பூத்) அமைக்க உரிய வாடகை நிர்ணயம் செய்து வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பெருமாள்புரம் காவல் நிலையத்திற்கு எதிரில் உள்ள தற்காலிக பேரூந்து நிலையத்தில் Transformer-க்கு தென்புறத்தில் 10’ X 10’ என்ற அளவில் ஆவின் பார்லர் (பூத்) அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்வது குறித்தும் அதற்கான மாத வாடகையாக ரூ.2000/-ஐ நிர்ணயம் செய்வது குறித்தும் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும்

நிபந்தனைகள்:

1) பெருமாள்புரம் காவல்நிலையத்திற்கு எதிரில் அமைந்துள்ள தற்காலிக பேரூந்து நிலையத்தில் 10’ X 10’ என்ற அளவில் ஆவின் பார்லர்(பூத்) அமைப்பதற்கு மாத வாடகை கட்டணமாக ரூ.2000/-ஐ நிர்ணயம் செய்யப்படுகின்றது

2) தற்காலிக பேரூந்து நிலையத்தில் அமைக்கப்படும் 10’ X 10’ என்ற அளவில் ஆவின் பார்லர்(பூத்) பொதுமக்களுக்கும், பேரூந்து போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறு செய்யும் வகையில் இருத்தல் கூடாது.

3) ஆவின் பார்லர்(பூத்)-இல் பால் பொருட்கள் தவிர அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை, சிகரெட் போன்ற போதை பொருட்களும் மற்றும் வடை, சாப்பாடு போன்ற உணவு சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏதும் விற்கப்படக்கூடாது.

4) மேற்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்படும் இடம் பின்னாளில் மாநகராட்சிக்கு தேவைப்படும் நேரத்தில் எவ்வித தடையுமின்றி எவ்வித இழப்பு தொகையும் கோராமல் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

5) ஆவின் பார்லர்(பூத்) க்குரிய மாத வாடகை கட்டணமாக ரூ.2000/-ஐ பிரதி மாதம் 5ஆம் தேதிக்குள் மேலப்பாளையம் மண்டல அலுவலகத்தில் செலுத்திவிட வேண்டும்.

6) மேற்கண்ட இடம் ஒதுக்கீடு தொடர்பாக ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் ஒப்பந்தம் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்டுள்ளவாறு மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 26, பெருமாள்புரம் காவல் நிலையத்திற்கு எதிரில் உள்ள தற்காலிக பேரூந்து நிலையத்தின் உட்புறம்

Transformer-க்கு தென்புறத்தில் 10' X 10' என்ற அளவில் ஆவின் பார்லர் (பூத்) அமைக்க உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்வது குறித்தும் அதற்கான மாத வாடகையாக ரூ.2000/-ஐ நிர்ணயம் செய்வது குறித்தும் மாமன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 212:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(கோப்பு எண் இ1/160/2021-மே.பா.)

---

2) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு 18-ல் ஆரோக்கியநாதபுரம் பகுதியில் உள்ள பொது மக்கள் இரண்டு பொது குழாய்கள் புதியதாக அமைத்து கொடுக்க 06.10.2020-ம் தேதிய மனுவில் கோரியுள்ளார்கள். மேற்கண்ட பகுதியில் வாழும் பொது மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் 300 குடும்பங்கள் வாழும் பகுதயாகவும், அன்றாட கூலித் தொழில் செய்யும் கொத்தனார், எலக்ட்ரீசியன், பெயின்டர் போன்ற பணிகள் செய்யும் மக்களை கொண்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாகும். இப்பகுதியில் ஏற்கனவே உள்ள பொது குழாய்கள் போதுமானதாக இல்லை. இப்பகுதிக்கு காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. மேற்கண்ட பொது மக்கள் வெகு சீக்கிரமே வேலைக்கு செல்வதால் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று மேலும் இரண்டு பொது குழாய்கள் அமைக்கவும், பொது குழாய் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.16,000/-க்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட ஆரோக்கியநாதபுரம் பகுதி வாழ் பொது மக்கள்வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் கூலித் தொழிலாளர்களின் கோரிக்கையினை ஏற்று இரண்டு பொது குழாய்கள் அமைக்கவும், அதற்கான செலவினம் ரூ.16,000/-க்கும் நிர்வாக அனுமதியும் மாமன்றம் ஒப்புதலும் வழங்கலாம்.

தீர்மானம் எண் 213:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

3) திருநெல்வேலி மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதி 2020-21-ன் கீழ் (IUDM 2020-21) 1.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 1வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 2.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 2வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 3.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 4வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 4.வார்டு எண்.26 காமராஜர் சாலையில் இருந்து சாராள் தக்கர் கல்லூரி வளாகம் வரையுள்ள 80அடி திட்டச்சாலையில் தார்த்தளம் அமைத்தல் 5.இராமையன்பட்டி உரக்கிடங்கு சாலையில் தார்த்தளம் அமைத்தல் 6.வார்டு எண்.47 கக்கன்ஜிநகர், கைவினைஞர்நகர், லெட்சுமிநகர், தங்கலெட்சுமிநகர் மற்றும் வார்டு எண்.50 அமராவதி நகர் சாலையில் தார்த்தளம் அமைத்தல் பணிக்கு ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு G.O.(D).No.303 Municipal Administration & Water Supply (MA2) நாள் 09.09.2020ல் ரூ.4.40 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.15089-18/2020/DO2 நாள் 19.09.2020ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 24/2020-21-ன் படி அகில இந்திய அளவில் The Hindu ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் இந்து தமிழ் நாளிதழில் 24.09.2020 அன்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 01.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 28.10.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 17.11.2020 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (1) மெசர்ஸ்.முத்துமணிகண்டன் & கோ (2) திரு.S.வெள்ளப்பாண்டி (3) திரு.I.கணபதி மற்றும் (4) திரு.KMA Nizam Mohideen ஆகிய நான்கு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 18.11.2020 -ல் திறக்கப்பட்டு

பரிசீலனை செய்யப்பட்டதில் திரு.KMA Nizam Mohideen ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்ப்நதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 26.11.2020 ன்படி திரு.KMA Nizam Mohideen ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒப்பந்தப்புள்ளிகளான (1) மெசர்ஸ்.முத்து மணிகண்டன் & கோ (2) திரு.S.வெள்ளப்பாண்டி மற்றும் (3) திரு.I.கணபதி ஆகிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் (1) மெசர்ஸ்.முத்து மணிகண்டன் & கோ (2) திரு.S.வெள்ளப்பாண்டி மற்றும் (3) திரு.I.கணபதி ஆகிய ஒப்பந்தக்காரர்களின் விலை அட்டவணைகள் 03.12.2020ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மெசர்ஸ்.முத்து மணிகண்டன் & கோ நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திரு.S.வெள்ளப் பாண்டி ஒப்பந்தக் காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திரு.I.கணபதி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதி 2020-21-ன் கீழ் (IUDM 2020-21) 1.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 1வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 2.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 2வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 3.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 4வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 4.வார்டு எண்.26 காமராஜர் சாலையில் இருந்து சாராள் தக்கர் கல்லூரி வளாகம் வரையுள்ள 80அடி திட்டச்சாலையில் தார்த்தளம் அமைத்தல் 5.இராமையன்பட்டி உரக்கிடங்கு சாலையில் தார்த்தளம் அமைத்தல் 6.வார்டு எண்.47 கக்கன்ஜிநகர், கைவினைஞர்நகர், லெட்சுமிநகர், தங்கலெட்சுமிநகர் | ரூ.4,35,44,659/- | ரூ.4,57,46,581/- | ரூ.4,61,47,069/- | ரூ.4,68,63,816/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் வார்டு எண்.50 அமராவதி நகர் சாலையில் தார்த்தளம் அமைத்தல் | | | | |
| | | | 5.06% மதிப்பீட்டை விட அதிகம் | 5.98% மதிப்பீட்டை விட அதிகம் | 7.62% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுள்ள மெசர்ஸ்.முத்துமணிகண்டன்&கோ நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,57,46,581/- ஆனது மதிப்பீட்டைவிட 5.06% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 11.12.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 16.12.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டைவிட 5.06% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.90% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மெசர்ஸ்.முத்து மணிகண்டன்&கோ நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.4,56,78,348/- ஆனது மதிப்பீட்டை விட 4.90% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 22.12.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 30.12.2020-ம் தேதிய கடிதத்தில் தற்போது சாலை அமைக்க தேவையான பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 04.01.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.முத்துமணிகண்டன்&கோ நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.4,56,78,348/- ஆனது மதிப்பீட்டை விட 4.90% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதி 2020-21-ன் கீழ் (IUDM 2020-21) 1.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 1வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 2.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 2வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 3.வார்டு எண்.19 ஜான்சன்நகர் 4வது மெயின் சாலையில் தார்த்தளம் அமைத்தல் 4.வார்டு எண்.26 காமராஜர் சாலையில் இருந்து சாராள் தக்கர் கல்லூரி வளாகம் வரையுள்ள 80அடி திட்டச்சாலையில் தார்த்தளம் அமைத்தல் 5.இராமையன்பட்டி உரக்கிடங்கு சாலையில் தார்த்தளம் அமைத்தல் 6.வார்டு எண்.47 கக்கன்ஜிநகர், கைவினைஞர்நகர், லெட்சுமிநகர், தங்கலெட்சுமிநகர் மற்றும் வார்டு எண்.50 அமராவதி நகர் சாலையில் தார்த்தளம் அமைத்தல் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 04.01.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.முத்து மணிகண்டன் & கோ நிறுவனத்தின் இறுதியான விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.4,56,78,348/- ஆனது மதிப்பீட்டை விட 4.90% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.440.00 இலட்சத்திற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதி 2020-21-ன் (IUDM 2020-21) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 214:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண்.24/2020-21)

---

4) திருநெல்வேலி மாநகராட்சியில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் தச்சநல்லூர் மண்டல அலுவலக கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு, அப்பகுதியில் அலுவலகம் மற்றும் வணிக வளாகம் கட்டும் திட்டப்பணிகள் (Re-development of office cum commercial complex) விரைவில் துவங்கப்பட உள்ளது. மேற்படி தச்சநல்லூர் மண்டல அலுவலக கட்டிடத்தின் வளாகத்தில் உள்ள 8 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ளது. மேலும் மண்டல அலுவலக பழைய கட்டிடத்தின் முன்புறமுள்ள சாலையின் (நடைபாதை) வழியாக மேற்படி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு Pumping main 300 mm dia CI பிரதான குழாய் ஒரு எண்ணமும் மற்றும் 200mm dia AC Pipe இரண்டு எண்ணமும் மற்றும் 150mm dia AC pipe ஒரு எண்ணமும் ஆக மொத்தம் மூன்று எண்ணம் குடிநீர் விநியோக மெயின் குழாய்களும் இவ்வழியாக பதிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் Fencing-லிருந்து 6 மீட்டருக்கு அப்பால் புதிய அலுவலக கட்டிடம் அமைக்கப்பட இருப்பதால் மேற்படி குடிநீர் குழாய் சேதம் அடையும் நிலையிலும் மற்றும் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதாலும் மேற்படி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தினுள் புதிதாக Pumping main மற்றும் Delivery main குழாய்களை இடம் மாற்றியமைப்பதற்கான பணிகளை அவசர அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனவே சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் கட்டிடப் பணிகைள மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்படி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு Pumping main 300 mm dia CI பிரதான குழாய் ஒரு எண்ணமும் மற்றும் 200mm dia AC Pipe குடிநீர் விநியோக குழாய் இரண்டு எண்ணமும் மற்றும் 150mm dia AC pipe குடிநீர் விநியோக குழாய் ஒரு எண்ணம் ஆகியவைகளை இடம் மாற்றி புதிதாக அமைக்கும் பணிகளை மேற்கொள்வதறகு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24.55 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகளை அவசர அவசியமாக மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24.55 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை சீர்மிகு நகரத் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்தில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் கட்டிடப்பணிகளை (Re-development of office cum commercial complex) அவசரமாக மேற்கொள்ள வேண்டியிருப்பதால், வார்டு அலுவலக வளாகம் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிற்குரிய Pumping main 300 mm dia CI பிரதான குழாய் ஒரு எண்ணமும் மற்றும் 200mm dia AC Pipe இரண்டு எண்ணமும் மற்றும் 150mm dia AC pipe ஒரு எண்ணமும் ஆக மொத்தம் மூன்று எண்ணம் குடிநீர் விநியோக குழாய்களை அவசர அவசியமாக இடம் மாற்றியமைப்பதற்குரிய பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.24.55 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மேற்படி செலவினத் தொகையினை சீர்மிகு நகரத் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 215:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(மதிப்பீடு எண் 72/2020-2021-தச்சை)

---